வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

அருள்நிதி.G.T.கணேசன்,
பொறுப்பாசிரியர்,
தாமிரபரணி ஸ்கை டிரஸ்ட்,
வேதாத்திரி அமைதிப் பூங்கா,
94 சேரன்மகாதேவி ரோடு,
பேட்டை ,திருநெல்வேலி - 627 004.
போன்: (O) 0462-2330093. செல்: 9488474209.

# அறிவுத்திருக்கோயில் - ஓர் அறிமுகம்

ஆதியிலே இயக்கமற்று அசைவற்று இருந்த இறைநிலையே இயங்கும் பொழுது விண்ணாகவும், விண்ணின் கூட்டினால் காற்று, வெப்பம், நீர், நிலம், என்ற ஐந்து பௌதீகப் பிரிவாகவும், பஞ்சபூதங்களின் இயக்கத்தினால் அழுத்தம், ஒளி, ஒலி, சுவை, மணம் என ஐந்து விளைவாகவும் இந்த விளைவுகளை உணரத்தக்க வகையில் புலன்கள் அமைந்த தாவரம் முதல் விலங்குகள் வரையிலான ஜீவன்கள் ஆகவும், இறுதியாகத் தனது அறிவையும், இறைநிலையையும் உணரத்தக்க ஆறாவது அறிவு பெற்ற மனிதனாகவும் பரிணாமம் அடைந்தது.

மனித உரு எடுத்தபின்பும், சிந்தனையாற்றல் உயரா முன்னர், விலங்கின வித்தின் மூலமாக, வந்ததினால் மிருக இனப் பதிவாகப் பறித்துண்ணும் குணத்தோடும் சிந்தனையில் உயர்ந்த பின்பும் விளக்கம் பெற்ற பின்பும் பழக்கத்திலிருந்து மீளமுடியாவண்ணம் மனிதஇனம் குழப்பத்திலும் துன்பத்திலும் தவித்துக் கொண்டிருக்கிறது. விஞ்ஞான, பொருளாதார, போக்குவரத்து வசதிகள் வளர்ச்சியடைந்த போதிலும், மனிதன் அமைதியின்றித் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறான்.

மனிதன் சிந்தனையிலே உயர்ந்து, அறிவையும் இறைவனையும் உணர மன அலைச்சுழலைக் குறைத்து அமைதி பெற வேண்டும். மனமோ உடலும் உயிரும் இணக்கமான முறையில் இணைந்துள்ள காலத்தில்தான் சிறப்பாக உள்ளது. எனவே உடலையும் நலமாக வைத்துக் கொள்ள வேண்டும். மனிதனாக வந்ததிலுருந்து இதுவரை ஏற்ற பாவச்செயல் பதிவையும் போக்கித் தூய்மை பெற வேண்டும். மனவளக்கலை மன்றங்கள் மனஅமைதிக்குத் தியானப் பயிற்சியையும் உடல் நலத்திற்குக் காயகல்பம் மற்றும் உடற்பயிற்சியும், தீய வினைப்பதிவுகளைப் போக்க அகத்தாய்வுப் பயிற்சிகளையும், சமுதாய இயற்கை தெளிவுகளைப் பெறத் தத்துவ விளக்கங்களையும் மக்களுக்கு அளித்து வருகின்றன. மனவளக்கலை மன்றத்தின் செயல் மையமாக உள்ளது அறிவுத்திருக்கோயில்.

## அறிவுத்திருக்கோயிலின் சிறப்பு:

பக்தி நெறியில் ஆற்றும் இறை வழிபாட்டிற்கு மனிதகுலத்திற்குப் பல்லாயிரம் கோயில்கள் உள்ளன. அதற்கு மேலாக ஒவ்வொருவரும் ஞான நெறியிலும் மேம்பட்டு பிறவிப்பயனை அடையத் தவம் செய்து தத்துவம் உணர்ந்து அறிவை அறிந்து வாழ வேதாத்திரி மகரிஷி அவர்கள் கண்ட ஞான ஆலயமே அறிவுத் திருக்கோயில்.

காலை மாலை அறிவுத்திருக்கோயிலில் நடக்கின்ற கூட்டுத்தியானம். உலக நலத்திற்கான சங்கல்பம் நல்ல எண்ண அலைகளாக வான்காந்தத்தில் பதிந்து சமுதாயத்தில் அமைதியை உருவாக்கும் அடித்தளமாகும். உடல்நலம், மனவளம், பொருள்வளம், நட்புநலம், குடும்ப அமைதி, சமுதாய இணக்கம், இறையுணர்வு போன்ற பூரண நிலையைத் தோற்றுவிக்கும் ஞான ஒளி விளக்காகும்.

கருவிலே திருவுடைய குழந்தைகள் உருவாவதற்கு அடித்தளமாகவும், இளைய தலைமுறையினரின் எதிர்கால வாழ்விற்கு ஒளியூட்டக்கூடிய, வெற்றியளிக்கக்கூடிய வாழ்க்கை வழிகாட்டியாகவும் விளங்கும்.

வாழ்க வளமுடன்